அனுப்புநர்
திரு. சி.சு. தண்டபாணி,
தனி அலுவலர்/வ.வ.அ (கி.ஊ),
மௌலிவாக்கம் ஊராட்சி
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர் திரு. டி.M. அசோக் குமார்
எண் :- 14, சிங்காரம் முதலியார் தெரு
தி.நகர், சென்னை - 17
Pin - 600 017

ந.க.எண். 7/2019-20

நாள். 20/5/2019
20/5/19

அய்யா :-

பொருள் :- மனை உட்பிரிவு அனுமதி - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - மௌலிவாக்கம் ஊராட்சி - ச.எண். 1/1C1A1, 4A1 & 1/108 -ல் வீடு கட்டிடம் கட்ட ஒப்புதல் கட்ட கோரியது - கட்டணங்கள் செலுத்த கோருதல் - தொடர்பாக.

பார்வை :- 1. தங்கள் விண்ணப்பம் நாள். 20/5/2019 20/5/19

2. அரசாணை எண்.255/ஊ.வ. துறை நாள்.18.08.1997

பார்வை 1 ல் கண்ட தங்களின் வீடு/ கட்டிடம் கட்டும் வரைபட அனுமதி விண்ணப்பத்தின் பேரில் ஒப்புதல் வழங்க வேண்டி கீழ்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**ஊராட்சி கட்டணம்**

**கட்டிடம் மனை உட்பிரிவு**

| | |
|---|---|
| 1 சதுர அடிக்கு ரூ. /-வீதம் 1 Sqm x 5.00 வீதம் 1641 Sqm x 5.00 | 8205- |
| ஆய்வுக் கட்டணம் ரூ. | 500- |
| வரைபடம், கூடுதல் நகல்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.100/-வீதம் | 200- |
| மொத்தம் | 8905- |

மேற்குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் Village Panchayat Fund,Moulivakkam என்ற முகவரிக்கு ஏதேனும் ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து தனித்தனி வங்கி வரைவுகளாக பெற்று இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை ஊராட்சியில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டியது. மேற்கூறிய கட்டணங்கள் செலுத்திய பின்னரே ஒப்புதல் வழங்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

20/5

தனிஅலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
மௌலிவாக்கம் ஊராட்சி

20/5/19

Scanned by CamScanner

79

மௌலிவாக்கம் ஊராட்சி தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை:-திரு.சி.சு. தண்டபாணி

ந.க.எண். 7/2019-20 நாள்21/5/2019

பொருள் : மனைப்பிரிவு / மனை உட்பிரிவு - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - மௌலிவாக்கம் ஊராட்சி - ச.எண். 1/1C2A1, 4A1 & 1/108-ல் மனை உட்பிரிவு - அனுமதி வழங்குதல் தொடர்பாக.

பார்வை : 1.சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் , சென்னை - 8 அவர்களின் கடித எண்..~~DDIS~~ L1/2366/2018/ நாள்.21.2.2019
2.ஆணையர், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக ப.மு.எண். 1352/2018/A3 நாள்26/3/2019.
3 மௌலிவாக்கம் ஊராட்சி [illegible] எண் 0319/21.5.2019
B.

*****

ஆணை :-

பார்வையில் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு சுற்றியுள்ள மனைகள் சாலைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டு ஒதுக்கீட்டின் கீழ்கண்ட மனைப்பிரிவு மற்றும் மனை உட்பிரிவு விதிகளுக்கு உட்படுத்தி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

### நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மு.மு..66/ 2016-2017ன் படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப் பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக் கற்களைக் கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிகால், துப்பரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துதர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திலுள்ள இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.

2. தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாத கடை பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கில்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.

Scanned by CamScanner

4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும் தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ உபயோகத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரதிற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவறோ கட்டக்கூடாது.

6. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறு , மல அறை, எருக்குழி , மாட்டுத் தொழுவம், உந்து வண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவைபோன்ற குடியிருப்பு அல்லாது அதைச் சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

7. மனையின் பரப்பின் 50 சதவீதத்திற்கு மேல் கட்டிடம் கட்டக்கூடாது.

8. கடக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ, மனையிலிருந்து மண்தோண்டி எடுத்த பள்ளங்கள் ஏற்படுத்தக்கூடாது.

9. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் சட்டத்திட்டங்கள் விற்பனைப் பத்திரங்க்ள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு**

மனை உட்பிரிவின் வரைபடம்

பெறுநர் திரு. ரெ.ம. அசோக்குமார்

எண்.1-14, சிங்கார முதலியார் தெரு,

தி.நகர், சென்னை-17

பின்-600017.

தனிஅலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
மௌலிவாக்கம் ஊராட்சி

21/5/19

Scanned by CamScanner

# Chennai Metropolitan Development Authority
## PLANNING PERMIT

(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 12344

PPD/LO No 27/2019

Date of Permit 21/02/2019

File No. L1/2366/2018

Tmt. T. M. Sulochana
No. 14, Singara Mudaliar Street,
T. Nagar, Chennai - 600017

Name of Applicant with Address..........................................

Date of Application 13/02/2018

Nature of Development : Layout/~~Sub-division~~ of Land/B~~uilding cons-~~
~~ruction/Charge in use of Land/Buildin~~g

Site Address Laying out of house sites in S.No. 1/1C1A1, 4A1 & 1/1C1B of Moulivakkam Village, Pallavaram Taluk, Koncheepuram District,

Division No. Kunrathur Panchayat Union Limit.

..........................................................................

Development Charge paid Rs ₹ 8000/- Challan No B-008412 Date 09/11/2018

PERMISSION is granted to the layout/~~sub-division~~ of land/ ~~building construction~~/~~change in use of land/building~~ according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on ____________________ the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

01/03/2019

For MEMBER SECRETARY

21/2/19

Scanned by CamScanner

35

அனுப்புநர்

திரு.ம.பாஸ்கரன்,பி.எஸ்சி.,
ஆணையாளர்,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
(இ) படப்பை.

பெறுநர்

உறுப்பினர் செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
எழும்பூர் - 600 008.

ந.க.எண். 1325/2018/அ3 நாள் - .01.2019.

அய்யா,

பொருள் தானபத்திரம் - குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம் - மௌலிவாக்கம் கிராமம் - சர்வே எண். 1/1C1A,4A1 & 1/108 -ல் 2490 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு சாலையாக 663 சதுர மீட்டர் மற்றும் பூங்கா இடத்திற்கு (OSR) 186 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தினை - தானபத்திரம் மூலம் பதிவு செய்தது - தானபத்திரத்தின் சான்றொப்பமிட்ட நகல் அனுப்பி வைத்தல் - சார்ந்து.

பார்வை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் கடித Reg-L1/2366/2018, நாள் - 19.11.2018.

* * * * *

பார்வையில் கண்டுள்ள உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழும கடிதத்தின்படி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மௌலிவாக்கம் கிராமம் - சர்வே எண். 1/1C1A,4A1 & 1/108 - ல் 2490 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு சாலையாக 663 சதுர மீட்டர் மற்றும் பூங்கா இடத்திற்கு (OSR) 186 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தினை தானபத்திரம் வாயிலாக, இணையதள பதிவு எண் TP/51488604/2018-ன்படி, குன்றத்தூர் சார்பதிவாளர் பதிவு எண்-R/Kundrathur/Book-1/922/2019, நாள் 24.01.2019- ன் படி பதிவு செய்யப்பட்டது அதன் நகலினை சான்றொப்பம் செய்து இத்துடன் இணைத்து பணிந்தனுப்பப்படுகிறது.

இணைப்பு - சான்றொப்பமிட்ட இரண்டு
தானபத்திரங்களின் நகல்.

31/1/19

ஆணையாளர்,
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்.
(இ) படப்பை.

31/1/19

நகல் -

திருமதி.T.M.சுலோச்சனா,
எண் - 14, சிங்கார முதலியார் தெரு,
தி.நகர், சென்னை - 600 017.

Scanned by CamScanner